# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2343/03 - 2023 ජූලි මස 31 වැනි සඳුදා - 2023.07.31

*2343/03 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட* PV 115017 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான பெனடிக்ட் XVI கத்தோலிக்க உயர் கல்வி நிறுவனம் (பிறைவேட் லிமிட்டெட்) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிய 2326/ 12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் “ஆரம்பக் கல்வியில் சிறப்பு கல்வி இளங்கலைமாணி” என்னும் பதிவையும் நிரல் II இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. பெனடிக்ட் XVI கத்தோலிக்க உயர் கல்வி நிறுவனம் (பிறைவேட் லிமிட்டெட்) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது,

   (அ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) கணக்கியல் மற்றும் நிதியியலில் வணிக முகாமைத்துவ சிறப்பு இளமானி தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-


1A - PG 6419 — 286 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(i) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அத்துடன்:

(ii) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரத்தில்) கணிதத்தில் திறமைச் சித்தியொன்று (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

(ஆ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) முன்பிள்ளைப் பருவக் கல்வியில் சிறப்பு கல்வி இளமானி தொடர்பில் பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

(i) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் ; அத்துடன்:

(ii) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (சாதாரண தரத்தில்) ஆங்கிலத்தில் ஆகக்குறைந்த திறமைச் சித்தியொன்று (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. பெனடிக்ட் XVI கத்தோலிக்க உயர் கல்வி நிறுவனம் (பிறைவேட் லிமிட்டெட்) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| கணக்கியல் மற்றும் நிதியியலில் வணிக முகாமைத்துவ சிறப்பு இளமானி | பீபீஎம் கௌரவ (கணக்கியல் மற்றும் நிதியியல்) |
| முன்பிள்ளைப் பருவக் கல்வியில் சிறப்பு கல்வி இளமானி | பீஈடி கௌரவ (முன்பிள்ளைப் பருவக் கல்வி) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, யூலை 26.

EOG 07-0289/ 1

---

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட் லிமிட்டெட்) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதிய 2301/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "கணக்கியலில் வணிக முகாமைத்துவத்தில்

கௌரவ இளமானி'' என்னும் பதிவையும் நிரல் II இல் உள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

**அட்டவணை I**

*நிபந்தனைகள்*

1. சினெக் கெம்பஸ் (பிறைவேட் லிமிட்டெட்) இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது,

   (அ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் விளையாட்டு மற்றும் உடற்கல்வியில் கௌரவ கல்வி இளமானி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது மாகாண அல்லது சர்வதேச மட்டத்தில் விளையாட்டுத் துறையிலான அடைவுகளுடனான அதற்குச் சமமான தகைமைகள் ;

   (ஆ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் சந்தைப்படுத்தலில் வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமானி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. சினெக் கெம்பஸ் (பிறைவேட் லிமிட்டெட்) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| விளையாட்டு மற்றும் உடற்கல்வியில் கௌரவ கல்வி இளமானி | பீஈடி கௌரவ (விளையாட்டு மற்றும் உடற்கல்வி) |
| சந்தைப்படுத்தலில் வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமானி | பீபீஎம் கௌரவ (சந்தைப்படுத்தல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, யூலை 26.

EOG 07-0289/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.